யோகாசன ஆலய விஜயம்

மலர் 31	பிங்கள ஆண்டு தைத் திங்கள் January—1978	இதழ் 1

ஒருவனு மேஉல கேழும் படைத்தான்
ஒருவனு மேஉல கேழும் அளித்தான்
ஒருவனு மேஉல கேழும் துடைத்தான்
ஒருவனு மேஉல கோடுயிர் தானே.

ஒப்பற்ற பரம்பொருளாகிய சிவபெருமானே உலகங்கள் ஏழனையும் படைத்தருளினன் ; அவனே காத்தல், அழித்தல், ஆகியவற்றையும் புரிந்தருளினன். அவனே உலகமாய், உயிராய்த் திகழ்ந்தும் இருக்கின்றனன்.

— திருமூலர்.

சந்தா விபரம்	உள்நாடு	சிலோன்	வெளிநாடு (கப்பல்)	விமானம்
ஆண்டு சந்தா	ரூ. 4—00	ரூ. 6—00	ரூ. 15—00	ரூ. 30—00
ஆயுள் சந்தா	ரூ. 50—00	ரூ. 80—00	ரூ. 150—00	ரூ. 300—00
தனிப்பிரதி	40 காசு	50 காசு	ரூ. 1—25	ரூ. 2—00

உயர்திரு கோ மு. சுவாமி அவர்கள் பொன்மொழி

ஞான ஆசிரியன் உரைத்த உபதேச மொழியினை ஆதாரமாகக்கொண்டு அகந்தையை அகற்றி, உலக விஷய வாசனையை மறந்து தன் முனைப்பற்றிருக்கும் நிலையே மிக உயர்ந்த நிலையாகும்.

திருமதி சாவித்திரி செல்வராஜன்.

பௌர்ணமி வகுப்பு

22—2—1978 புதன்கிழமை இரவு 6-30 மணிக்கு கீழ்க்காணும் இடங்களில் வகுப்பு நடைபெறும் யாவரும் கலந்து பயன்பெறுக!

1. யோகாசன ஆலயம், 16-A, வன்னியர் முதல் தெரு, சூளைமேடு கோடம்பாக்கம், சென்னை-600 094.
2. அருள்மிகு மன்னார்சாமி கோயில், மன்னார்சாமி கோவில் தெரு, இராயபுரம், சென்னை-600 013.

வேள்விப் பயிற்சி வகுப்பு

12—2—1978 ஞாயிறு காலை 10 மணிக்கு ஷ யோகாசன ஆலயத்திலும், 26—2—78 ஞாயிறு காலை 10 மணிக்கு புரசைப்பாக்கம் செல்லப்ப கிராமணி தெரு எண் 13 இல்லத்திலும் வகுப்பு நடைபெறும். யாவரும் கலந்து பயிற்சி பெறுக!

மகளிர் பஜனைப் பிரிவு கிளை

சென்னை இராயபுரம் அருள்மிகு சேணியம்மன் கோவிலில் 20—1—1978 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு தொடங்கப்பட்டது. யோகாசன ஆலய தலைவர் உயர்திரு கோ. மு. சுவாமி அவர்கள் தலைமை வகித்தனர். திருமதி இராஜேஸ்வரி மருதை அவர்கள் திருவிளக்கேற்றி வைத்து திருவிளக்கு ஒன்றனை அன்பளிப்பாக வழங்கினர். மகளிர் குழுவினர் அருளிசை வழங்கினர். திருமதி வசுந்தரா முருகேச பாண்டியன் வரவேற்புரையும், செல்வி R. சாந்தி, B.Sc, நன்றியுரையும் நவின்றனர்.

பிரதி வெள்ளிக்கிழமை இரவு 6-30 மணிக்கு ஷ கோவிலில் பஜனை வகுப்பு நடைபெறும். மகளிர் யாவரும் கலந்து கொண்டு பயிற்சி பெற்று இறையருளை நாடுக!

R. சாந்தி, B.Sc.,
செயலர் மகளிர் பிரிவு,
யோகாசன ஆலயம்.

28.1.78

மகரிஷி தாயுமானவர்

தன்னையொருவர்

திரு. கோ. மு. சுவாமி அவர்கள்
நிகழ்த்திய உரை விளக்கம்.

சிந்தைத் துயரென் றொருபாவி
சினந்து சினந்து போர்முயங்க
நிந்தைக் கிடமாய்ச் சகவாழ்வை
நிலையென் றுணர்ந்தே நிற்கின்றேன்,
எந்தப் படியுன் னருள்வாய்க்கும்?
எனக்கெப் படிநீ யருள்செய்வாய்?
பந்தத் துயரற் றவர்க் கெளிய
பரமா னந்தப் பழம் பொருளே!

பதவுரை

பந்தத்துயர்-பிறவியால் வந்த துன்பத்தினை, அற்றவர்க்கு-நீங்கினவர்க்கு, எளிய-எளியனாகிய, பரமானந்தம்-மேலான இன்பத்தினைத் தருகின்ற, பழம்பொருளே!-பழைய பொருளே!, சிந்தை துயர் என்ற-மனோதுக்கமென்கிற, ஒருபாவி-ஒருபாவி, சினந்து சினந்து-கோபித்துக் கோபித்து, போர் முயங்க-போரினைச் செய்ய, நிந்தைக்கு இடம் ஆய்-நிந்தனைக்கிடமாகி; சகவாழ்வை-பிரபஞ்ச வாழ்க்கையை, நிலை என்று. நிலையானதென்றறிந்தே, நிற்கின்றேன்-பற்றுள்ளவனாய் நிற்கின்றேன்; உன்-தேவரீரது, அருள்-திருவருள், எந்தப்படி வாய்க்கும்?-எப்படி கிடைக்கும்? எனக்கு-அடியேனுக்கு, நீ-தேவரீர், எப்படி அருள் செய்வாய், எவ்வாறு கிருபை பண்ணுவாய் ?, என்க.

கருத்துரை

முன் பாடலில் சுவாமிகள் எல்லாம் வல்ல இறைவனை விளித்து ஐயனே! நின் திருவருட் பார்வை கிட்டுமாயின் என் தீவினையனைத்தும் மாண்டு மெய்யறிவு கிடைக்கப் பெறுவேன்; மெய்யடியார்க்குத்

தொண்டு செய்யும் பேறும் பெறுவேன் என்ருர். இப்பாடலில் பிறவித் துன்பத்திற்குக் காரணமாகிய உலக வாழ்வில் பற்றற்றவர்க்குப் பேரின் பத்தை எளிதில் வாரி வழங்கும் பழமையான பொருளே! உலக வாழ்வே நிலையானது என பற்றுள்ளவனுய் இருக்கும் எனக்கு நின்னருள் எவ்வாறு கிட்டும்? எங்ஙனம் நீ அருள் செய்வாய்? எனக் கேட்கின்ருர்;

விரிவுரை

இறைவன் எனப்படும் பரம்பொருளைத் தாயுமான அடிகளார், பேரின்பத்தைத் தரவல்ல பழமையாகிய பொருளே! என விளித்துப் பேசுகின்ருர். அப்பொருள் முதல் நடு முடிவற்றது. எனவே "ஆதி அந்தம் காட்டாத முதலா'! எனவும் கூறியிருக்கின்ருர். அருளாளர்கள் அனைவரின் கூற்றும் இதுவேயாம். இத்தகைய அரும்பொருள் பந்தம் எனும் கூட்டுக்குள் அகப்படாதவர்க்கு எளிமையாகக் காட்சி தந்து பேரானந்தத்தை விளைவிக்கின்றது. பந்தமெனும் கட்டுக்குள் அகப்பட்டவர்க்கு வன்மையாக மறைந்திருக்கின்றது.

பந்தம் என்பது உலக ஏடணை. அர்த்த ஏடணை, புத்திர ஏடணை என்பனவற்றுள் அடங்கும். இவற்றை விடுவதற்கு மனம் இடம் தரவில்லை. ஆகவே இறுதிக் காலத்தில் கடலில் துரும்பு அலக்கழிக்கப் படுவது போன்று ஆசைகளாகிய எண்ணங்களால் அலக்கழிக்கப்பட்டு மரண வேதனை படுகின்ருேம்.

"ஆழித் துரும்பெனவே அங்குமிங்கும் உன்னடிமை
பாழில் திரிவதென்ன பாவம் பராபரமே"

என்றனர் தாயுமானுரும். வாழ்நாளில் அதிகமாகச் சேகரித்து கடைசிக் காலத்தில் எஞ்சிய எண்ணக் குவியலுக்கேற்பவே மறுபிறவியும் அமைகிறது. பிரம்மா எனப்படும் சக்தி அவைகளைக் கொண்டு சிருஷ்டி செய்கிருன். ஜீவன் சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் எனும் ஐம்புலன்களோடும் மனம் புத்தி அகங்காரம் எனும் மூன்ருேடும் சேர்ந்து தொடர்கிறது. இத்தகைய துன்பம் வாராமல் காக்கவும் பிறவியே வேண்டாமென்றும் வேண்டினர் சான்ருேர்.

துப்புடையாரை அடைவதுஎல்லாம்
சோர்விடத்துத் துணையாவ ரென்றே
ஒப்பிலேன் ஆகிலும் நின்னடைந்தேன்
ஆனைக்கு அருள் செய்தமையால்
எய்ப்புஎன்னை வந்து நலியும்போது
அங்கேதும் நானுன்னை நினைக்கமாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன்
அரங்கத்தர வணைப் பள்ளியானே.

என பிற்காலத்தில் வரவிருக்கும் துன்பந்தனைத் தவிர்க்க முன்னதாகவே பரமனிடம் விண்ணப்பம் செய்துகொண்டார் பெரியாழ்வார். நம் உடலின் ஒன்பது துவாரங்களுள் யாதாயினும் ஒன்றன் வழியாக ஜீவன் பிரியும். ஆனுல் சாதகர் அல்லது யோகியர் ஞானியர் அருளாளர் என்போர் அருளையே பொருளாகக் கொண்டு உச்சியில் நிலைத்து நிற்பர். எனவே அவர்க்குத் துன்பமில்லை. ஏகாட்சரத்தில்

நிலைபெற்று நிற்பவரே சாதகராவார். அவர்கள் மரண வாதனையைத் தரும் அந்தகனுக்கு அஞ்சாதவர்! "அந்தகா! நீ ஒரு பகட்டாற் பகட்டுவது அடாதடா! காசு நம்பாற் செல்லாதடா!" என தாயுமானவர் மொழிந்ததைப்போல எதிர்த்து நிற்பர். ஏனெனில் எண்ணங்களாகிய துன்பத்தைத் தரும் மனம் அங்கில்லை.

சிவபெருமான் தியானம் செய்கையில் திரிசூலத்தைத் தனியே நிறுத்தி அதில் உடுக்கையை மாட்டி வைத்திருப்பர். இத் தத்துவம் அதுவேயாம். தியானம் அல்லது யோக நிட்டையில் இருக்கும் சமயம் மனமெனுங் கருவியைத் தூர நிறுத்தி விடுவர். அப்போது பந்தமெனும் பிணிப்பில்லை. எனவே துன்பமில்லை. தாயுமானுர் மனமெனும் பகைவனைத் தோழனுக்கி வேண்டுகின்ருர், "பொன்னிலே பணி போலும் மாயை தரும் மனமே! உன் புரைகள் தீர்ந்தாய் என்னிலோ யான் பிழைப்பேன். எனக்கினியார் உன்போல்வார் இல்லை இல்லை உன்னிலோ திருவருளுக்கொப்பாவாய். என்னுயிர்க்கோர் உறவுமாவாய்" என பகைவனையும் பண்போடு பேசி உறவுகொள்ளும் முறையைத் தாயுமானுர் நயம்பட உரைப்பதினின்றும் தெளியலாம்.

மனதை வாகனமாகவும், குருவாகவும், நண்பனுகவும், மனைவியாகவும் உருவகப்படுத்திப் பேசுவர். இங்கே அடிகளார் உற்ற நண்பனுகக் கொண்டு, "நண்பா! சித்தவிருத்திகள் என்பனவற்ருல் என்னைத் துன்புறுத்தாமல் உன்னுடைய குற்றத்தைத் தவிர்த்தாயானுல், நானும் பிழைப்பேன்; நீயும் திருவருளுக்கு ஒப்பாவதோடு உலகத்திலேயே பெறுதற்கரிய எனக்கு உயிர் நண்பனுகவும் ஆவாய்" எனப் பரிவோடு பேசுகின்ருர்.

பந்தத்தைத் தரவல்ல மனதினின்றும் விடுபட்டவர்க்குப் பழமையாகிய பரம்பொருள் எளிதாகக் கிடைக்கின்றது. பக்குவிகளாலேயே மனத்தை அகற்ற முடியும். ஆதலால் சுவாமிகள், "பரம்பரமாகிப் பக்குவம் பழுத்த பழஅடியார்க்கு அருள் பழுத்துச் சுரந்து இனிது இரங்கும் தான கற்பகமே!" எனவும் எடுத்துரைக்கின்ருர். பக்குவிகளாகப் பழுப்பது எவ்வாறெனில்? 'நமச்சிவாயத்தின் துணைக் கொண்டேயாம். திருமந்திரம் இதனை,

> ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
> ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவதும்
> நன்றுகண் டீர்இனி நமச்சி வாயப்பழம்
> தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறன்றே.

என ஓதுகின்றது. நமச்சிவாயத்தை பழுக்கவைத்து அதன் துணை கொண்டு மனதைப் பழுக்கச் செய்தோரே பந்தமெனும் துன்பத்தினின்றும் விடுபட்டு, உயிர்க்குயிராகவும், உலகுக்கெல்லாம் ஒப்பற்ற ஒரு தனிப் பொருளாகவும் விளங்கும் பரம்பொருளின் அருளைப் பெற்றனர். எனவே தாயுமானவர் இப்பாடலில் இறைவனை நோக்கி, "பந்தத் துயரற்றவர்க் கெளிய பரமானந்தப் பரம்பொருளே" என்றழைத்தனர்.

மனமே புலன்களின் வழிச்சென்று உலக இன்ப துன்பங்களையனுபவிக்கின்றது. புலன்களினுல் பெற்ற வாதனைப் பழக்கம் மீண்டும் மீண்டும் உலக இன்பங்களில் நாட்டங் கொள்கிறது. பெறமுடியாத போது வாட்டமுறுகிறது. அதனுல் பல்வேறு பாவச் செயல்களைச் செய்ய நேரிடுகிறது. இங்ஙனம் மனமானது ஒன்றற்கொன்று தொடர்பு

கொண்டு உலக நெறியில் வளர்ந்துகொண்டே செல்கிறது. இதையே உண்மை என்பர் உலகாயதர் அஃதாவது கண்டு, கேட்டு, உண்டு, உடுத்து நுகரும் இன்பங்களே நிலையானவை என்பவர் இவர். இந் நிலையைச் சாராமல் ஒருசொல் கொண்டு தடுத்து எனை வாழவைத்த ஞான குருவே! என தாயுமான அடிகளார் "தரணிமிசை லோகாயதன் சமயநடை சாராமல் வேதாந்த சித்தாந்த சமரச சிவானுபூதி மன்ன ஒருசொற் கொண்டு எனைத் தடுத்து ஆண்டு அன்பின் வாழவைத்த ஞான குருவே!" என மௌனகுருவை வணங்கிப் போற்றுகின்றார்.

மனமெனும் உடலுக்குப் புலன்களாகிய தலைகள் ஐந்தாகும். இதனை ஐந்துதலைப் பாம்பாக உருவகித்தனர் முன்னோர். ஸ்ரீ மந் நாராயணன் ஐந்துதலைப் பாம்பின் மீது பள்ளிகொண்டிருப்பது போல ஓவியமும் தீட்டினர். இப்பாம்பை வெல்வதற்குக் காரைக்காலம்மையார் தலையாலேயே ஊர்ந்து சென்று கயிலை மலையை அடைந்தார். இது ஜீவ யாத்திரை! வழிகாட்டுபவரே ஞான ஆசிரியர். இந்நெறியை தடுத்து நிந்தனையைக் கொடுக்கின்ற உலக வாழ்வே நித்தியம் என வாழ்கின்றேனே! இவ்வாறு வாழும் எனக்கு இறைவா! உன் திருவருள் எப்படி கிடைக்கும்? தேவரீர் எங்ஙனம் அருள புரிவீர்? என்று கேட்கின்றார்; "சிந்தைத் துயரென் றொருபாவி சினந்து சினந்து போர் முயங்க நந்தைக் கிடமாய்ச் சகவாழ்வை நிலையென் றுணர்ந்தே நிற்கின்றேன் எந்தப் படியுன் அருள்வாய்க்கும் எனக்கெப்படி நீ அருள் செய்வாய்?"

உலக இன்பங்களில் ஆழ்ந்து நுகரும்போது அதனால் விளைகின்ற துன்பந்தான் என்னே? இதனை விளக்கும் கதையைக் காண்பாம். சாது ஒருவர் துறவுக் கோலம் பூண்டு ஒவ்வோர் இரவுப் பொழுதையும் ஒவ்வொரு ஊரிலே கழித்து நாடோடியாகத் திரிந்து வந்தார். அவருடன் ஒருசீடனும் தொடர்ந்தான், சாது துறவுக்கோலத்துக் கேற்ப மனத்திலும் துறவு பூண்டொழுகினார் "அந்தக்கரணம் அடங்கத் துறப்பதுவே எந்தத் துறவினும் நன்றெந்தாய் பராபரமே" என்பர் தாயுமானார். சாது விவேகத்தில் வீரராகவும் எப்போதும் புலன்களுக்கு அடிமையாகாதவராகவும் வாழ்ந்தார் மாணுக்கனே நேர்மாறாக இருந்தான். உலக இன்பத்தில் அதிக நாட்டமுடையவனாக இருந்தமையால் அவசரபுத்தியும் மூர்க்கத்தனமும் குடிகொண்டிருந்தான.

ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருந்த அவர்கள், மகா அந்தர் நகரி என்ற ஊரையடைந்தனர். ராஜ ராஜேஸ்வர பிறஹத் மூடகதூர் என்ற மன்னன் அந்நகரை யாண்டுவந்தான. அந்நகரிலுள்ள சத்திரம் ஒன்றில் சாதுவும் சீடனும் தங்கினர். உணவுப் பொருள் ஏதாகிலும் வாங்கி வருமாறு சீடனையனுப்பினர் சாது. சற்றுநேரத்திற்கெல்லாம் திரும்பிய சீடன் பெரிய மூட்டை நிறைய தின்பண்டங்கள் பழங்கள் ஆகியவற்றைச் சுமந்து கொண்டு குதூகலத்துடன் வந்தான். வியப்போடு பார்த்த சாதுவை நோக்கி சுவாமி! இனி இவ்வூரை விட்டுப் போகவே வேண்டாம்! இங்கேயே தங்கி வாழலாம் வேண்டிய எல்லாப் பொருளகளும் மலிவாகவும் தாராளமாகவும் கிடைக்கின்றன. எது எடுத்தாலும் ஒருசேர் ஒரு காசுதான்! ஊசி முதல் தங்கம் வரையிலும் ஒரே விலை. காலம் முழுதும் இங்கேயே கழித்து விடலாம் இந்திர போகமும் இவ்வூருக்கு இணையாகாது என்று கெஞ்சினான்.

சீடனுடைய வார்த்தையைக் கேட்ட மறுகணமே சாது மான் தோல், கைத்தடி, பிச்சை பாத்திரம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு

விர்ரென்று சத்திரத்தை விட்டு வீதியில் வந்து நின்றுகொண்டார். என் அன்பு மாணவனே! இது நீ நினைப்பதுபோல இந்திர லோகமன்று பாழும் நரகமே! ஒரு கணமும் தாமதிக்காதே! புறப்படு! என்று மிக விரைவாக அழைத்தார். மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்த மாணுக்கனுக்கு குருவின் வார்த்தையும் செயலும் வியப்பாகவிருந்தன. நம எண்ணத்தில் மண் விழுந்து விட்டதே! இந்த சாதுவுக்குப் பித்து பிடித்து விட்டதா? என்று எண்ணினன். குரு தேவரே! எத்தனை ஊர்களைப் பார்த்தோம். இதுபோன்ற ஊர் நமக்குக் கிடைப்பது அரிது' எல்லாப் பொருள்களும் எளிமையாகக் கிடைக்கும் இவ்வூரைவிட்டுப் போக எவ்வாறு மனந்துணிந்தீர்? வேண்டாம் இங்கேயே காலத்தைக் கழித்து விடுவோம் என்று மன்ருடினன். மாணுக்கனின் அறியாமையையுணர்ந்த சாது கூறலானர்; பிள்ளாய்! நீ நினைப்பது முற்றிலும் தவறு. இவ்வூரில் தங்கியிருக்கும் ஒவ்வொரு விநுடியும் உயிர்க்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியதே! நீ நினைக்கும் இன்பங்கள் அனைத்தும் விரைவில் துன்பத்தையே தரும். என் வார்த்தையைக் கேள். உடனே புறப்படு! என்ருர்,

குருவை விட்டுப் பிரிந்தாலும் கவலையில்லை. இந்த சுவர்க்க போகத்தையே சுவைக்கலாம் என்ற எண்ணங் கொண்டவனுய், ஐயா, நீங்கள் வேண்டுமானுல் போகலாம்! நான் இவ்வூரை விட்டு ஒரு அடி கூட எடுத்து வைக்கமாட்டேன் என்று திட்டவட்டமாகக் கூறினன். மாணுக்கனின் அறியாமைக்காக சாது வருந்தினர். ஆனுலும் தான் அற்ப ஆசைகளுக்கு அடிமையாகாமல் புறப்பட்டுச் சென்ருர். "யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்" என்று தாயுமானுர் மொழிந்தவாறு உண்டுண்டுறங்குவதே இன்பம் என நினைத்தான் சீடன். பக்குவர்க்கும் அபக்குவர்க்கும் உள்ள வேறுபாடு இதுவே. அரங்கமாநகர் பள்ளிகொண்ட பெருமானை நோக்கி, ஐயனே! உன்னுடைய நாமத்தை உச்சரிப்பதை விடுத்து இந்திர லோகத்தை ஆளும் பதவி கிடைத்தாலும் பெறமாட்டேன் என்ருர் பெரியாழ்வார்; "இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருள்ளானே'.

அலைகடலை யொத்த அளப்பருஞ் செல்வம் கிடைப்பினும் அல்லல் என்றே தவிர்த்தனர் தாயுமானுர்! "எறிதிரைக் கடல் நிகர்த்த செல்வம் மிக அல்லல் என்று ஒருவர் பின் செலாது" என்றனர். இவர்கள் நிறை குடத்தை நிகர்த்தவர். ஆனுல் இச் சீடனே அரைகுடம் என்பது சொல்லாமலேயே விளங்கும். மகா அந்தர் நகர் என்ற அவ்வூரில் தனித்துத்தங்கிவாழ்ந்த மாணுக்கன் அளவற்ற மகிழ்ச்சியோடு காலங்கழித்து வந்தான். புலன்களுக்குப் பூரண அடிமையானுன். மனமார வேண்டுவ எலாம் புசித்தான். உண்ட மயக்கத்தில் அயர்ந்து உறங்கினன். கவலையே இல்லாமல் வாழ்ந்த அவன் சில ஆண்டுகளில் அடையாளமே தெரியாதவாறு தொந்தி பெருத்து வாட்ட சாட்டமாகப் பருத்து விட்டான். முன்னுள்களில் குருவுடன் பழகியது, செய்ய வேண்டிய நித்திய கருமங்கள் அனைத்தையும் மறந்தான். மனத்திற்கு அடிமை யானுன். மேலும் சுகபோக வாழ்வை வளர்த்துக் கொள்வதிலேயே சிந்தையைச் செலுத்தினன்.

அந்நாட்டு ஆட்சியின் நிலையைக் காண்போம். அரசனுக்கு அவ்வப்போது உறுதுணை நின்று செந்நெறி புகட்டி திறம்படச் செயல்படுத்துவது அமைச்சரின் கடன். அவ்வாறன்றி தவருன வழிகளைக் கூறுகின்ற அமைச்சரைக் காட்டிலும் எழுபது கோடி பகைவர் பக்கத்தில்

இருத்தலும் நன்மை என திருவள்ளுவர் கூறுகின்ருர். "பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர் எழுபது கோடி உறும்" அந்நாட்டு அமைச்சரோ சுத்தமான வடிகட்டிய முட்டாளாக இருந்தான். இவனைத் தோற்கடிக்கும் அளவுக்கு அரசன் அதிதீவிர முட்டாளாக விளங்கினுன். மன்னன் எவ்வழி மக்களும் அவ்வழிதானே? அதிகாரி களும் மக்களும் முட்டாள்தனத்தில் ஒருவரையொருவர் போட்டி போட்டு முன்னேறினர்,

ஒருநாள் ஒரு அதிசய சம்பவம் நிகழ்ந்தது, சாலையோரமாக ஒருவன் நடந்து சென்று கொண்டிருக்கையில் புதிதாகக் கட்டப்பட்ட வீட்டின் ஒருபக்கத்துச் சுவர் இடிந்து அவன்மீது விழுந்தது. காய மடைந்த அவன் அரசனிடம் முறையீடு செய்தான். அவ்வீட்டுச் சொந்தக்காரன் அரசன்முன் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட் டான். நீ கட்டிய கட்டிடம் இடிந்து இம்மனிதனை ஆபத்துக்குள்ளாக் கியதே! நீ ஏன் தண்டனைக்கு ஆளாகக்கூடாது? என்ருன் மன்னன். நடுநடுங்கிய வீட்டுக்காரன் அரசே! கட்டிடத்திற்கு உரிமையாளன் யானே யாளுலும் கட்டியவன் வேருெருவனன்ருே? கட்டிடத்தைப் பற்றி எனக்கொன்றும் தெரியாதே! என்ருன்- ஓகோ! நீர் சொல்வதும் நியாயம்தான். கட்டிடத்தைக் கட்டியவனை உடனே அழைத்து வாருங்கள்! என கோபாவேசத்தோடு சிப்பந்திகளைப் பார்த்து கத்தி ஞன் மன்னன். அவர்களும் ஓடிய வேகத்தில் கட்டிடத்தை நிருமா ணித்தவனைப் பிடித்து வந்தனர். ஏ மூட மனிதா! உன்னுல் கட்டப்பட்ட கட்டிடம் இடிந்து என் நாட்டுப் பிரஜையைத் துன்பத்துக்குள்ளாக் கியதே! உன்னைத் தூக்கு மேடைக்கு அனுப்புவதற்குமுன் ஏதாவது விருப்பமிருந்தால் தெரிவித்துக்கொள்! என்ருன் மன்னன். மன்னனின் மூட புத்தியைப் புரிந்துகொண்ட கட்டிட நிருமாணி சாமர்த்தியமாகக் கூறலானுன்; அரசே! கட்டிட வேலையை நிருமாணித்தவன் நானே யானுலும் இந்த இடிந்த சுவரைக் கட்டியவர் கொத்தனுர்தான். அவரே பொறுப்பாளி. அவர் சரியாகக் கட்டியிருப்பாராகில் இடிவ தற்கு நியாயமில்லை என்ருன். மூடமன்னன் இதுவும் நியாயமாகத் தான் இருக்கிறது என்று தலையை அசைத்துக்கொண்டே காவலாளி களைப் பார்த்துக் கொத்தனுர் ,எங்கிருந்தாலும் தேடிப் பிடித்து வாருங்கள்! என்ருன் உரத்த குரலில்.

பாலத்தைப் பழுது பார்த்துக்கொண்டிருந்த வயது முதிர்ந்த கொத்தனுரைப் பிடித்து இழுத்து வந்தனர் காவலாளிகள். கொத்த னுருக்கு ஒன்றுமே புரியவில்லை பாவம். அரசன்முன் திருதிருவென்று விழித்து நின்ருர். அடே அற்பனே! அரைகுறை வேலை கற்றுக்கொண்டு வீடுகளைக் கட்டி என் நாட்டுப் பிரஜைகளைக் கொல்லப் பார்க்கிருயே! இக் கொடுமைகளைச் செய்ய என்ன துணிச்சல்? என்று விழிகள் கோபத்தால் சிவக்க பற்களை கடித்தான். நடைபெற்ற விபரீத நிலை யைப்புரிந்துகொண்ட கொத்தனுர். மன்னனின் அபார மூளையைப்பற்றி முன்னமேயே தெரிந்து வைத்திருந்ததால் தான் தப்பித்துக்கொள்ள தந்திரமான பதிலைச் சொன்னுன்; மகாராஜா! குற்றம் குற்றமே! ஆனு லும் அது என்னுடைய குற்றமன்று. கலவையில் சுண்ணும்பு சரிவர கலக்கப்படவில்லை. ஆகையால் சுவர் உறுதிப்படாமல் ஆட்டங்கண்டு வீழ்ந்தது என்ருன். சுண்ணும்பு கலவையைக் கூட்டினவன் யார்? என்ருன் மன்னன். நீதி தவருத அரசே! புத்துசிங் காட்பாடி என் பவனே சுண்ணும்புக் கலவையைச் செய்தான் என்ருன் வயதுமுதிர்ந்த

கொத்தனுர். காவலாளிகள் அரசர் ஆணையிடு முன்பே எச்சரிக்கையோடு ஓடினர். குடிபோதையில் பிதற்றிக்கொண்டிருந்த புத்துசிங்கை அலக்காகத் தூக்கிவந்து அரசன்முன் நிறுத்தினர். அடே மூடனே! இக் கொத்தனுர்க்கு ஏன் சரியான சுண்ணும்புக் கலவையைக் கொடுக்கவில்லை? உன்னுல் எவ்வளவு தொல்லை உண்டாயிற்று? உனக்கு மரண தண்டனை விதிக்கப் போகிறேன் என்ருன் மன்னன். மரண தண்டனை என்றதும் மயக்கமெல்லாம் மாயமாய் மறைந்துவிட்டது புத்துசிங்குக்கு, மன்னு! நான் என்ன செய்வேன்? தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தவன் விஷமம் பிடித்தவனுக இருந்தான். சரியான நேரத்தில் தண்ணீர் கிடைக்கவில்லை. தண்ணீர் குறைவுபட்டாலும் மிகுதியானுலும் சுண்ணும்புக் கலவை பக்குவப்படாது. இதற்கு அவனே முழுவதும் பொறுப்பாளி என்ருன்.

அரசன் மூளை ஏற்கனவே கலக்கம். மேலும் மேலும் எல்லோருமாகச்சேர்ந்து குழப்பவே யாரைத் தண்டிப்பது என்று புரியாமல் திண்டாடினுன். ஒவ்வொருவர் கூறுவதும் அவரவர் வழி சரியாகவே இருக்கிறது. நீதி வழங்கியாக வேண்டும் நேரமும் பகல் சாப்பாட்டு வேளையாயிற்று கோபம் கோபமாக வந்தது அரசனுக்கு. தண்ணீர் ஊற்றியவனை உடனடியாக இழுத்து வாருங்கள் என்று உரக்கச் சத்தம் போட்டான். தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த அவனை தோல்பையோடு பிடித்து இழுத்து வந்தனர். கோபம் அளவுக்கு மீறியதால் அவனை விசாரணை செய்யாமலேயே கொண்டு போங்கள் அவனைத் தூக்குமேடைக்கு! என்று கர்ஜித்தான். மூடமந்திரியோ ஆகா என்ன நீதி! என்று மன்னனைப் பாராட்டினுன்.

திடீரென்று அரசனுக்கு ஞானுேதயம் ஆனது போலும்! இவனையும் கேட்போமே என்று அடேய்! உன் விளையாட்டுத் தனத்தால் தண்ணீர் கலப்பு சரியில்லாமல் சுண்ணும்பு கெட்டு எவ்வளவு விபரீதச் செயல் உருவாயிற்று. எத்தனைபேர் இறந்திருப்பார்கள். ஆகையால் நீ இப்போது பலியாகு என்ருன். மகாராஜா! நான் என்ன செய்வேன் தெருவைக் கடந்து போய் தண்ணீர் கொண்டு வர வேண்டும். அப்படி வரும் போது நாட்டியக்காரி சாளரத்திலே சாய்ந்து கொண்டு இனிமையாகப் பாடினுள். என் மனதைப் பறிகொடுத்தேன்; இசையில் என்னையும் மறந்தேன். அதற்குள் தோற்பை கிழிந்திருந்ததால் தண்ணீர் எல்லாம் கீழே போய்விட்டது. அவள் மட்டும் பாடாமலிருந்திருந்தால் என் கடமையை ஒழுங்காகச் செய்திருப்பேனல்லவா? அவளையே கேளுங்கள் என்ருன். அவனுடைய வார்த்தை அரசனின் மனத்தை இளகச் செய்தது. ஆம்! உண்மை உண்மை! விடுதலை செய்யுங்கள் இவனை. அழைத்துவாருங்கள் நாட்டியக்காரியை! அரசனிடமிருந்து ஆணை பிறந்தது. தப்பித்தது தம்பிரான் புண்ணியம் என்று தலை தெறிக்க ஓடினுன். நாட்டியக்காரி அரசன் முன் நிறுத்தப்பட்டாள். ஏ நடனப்பெண்ணே! சாளரத்தில் நின்றுகொண்டு பாடச்சொன்னது யார்? உன்னுல் நாட்டிற்கே கேடு வந்துவிட்டது உன்னை ஒழித்தால் தான் நாடு சீர்படும் ஆணையை நிறைவேற்றுங்கள் என்று கூறிவிட்டு அரண்மனைக்குள் புகுந்துவிட்டார் மகாராஜா.

செய்வதறியாமல் திகைத்தாள் நாட்டியக்காரி. பாவம் நங்கை தூக்கு மேடைக்கு கொண்டு போகப்பட்டாள் துரதிருஷ்டப்பெண். அப்போதே அவளுக்குப் பாதி உயிர் போய்விட்டது போலாகிவிட்டாள். அங்கே திடும்மென ஒரு புதிய பிரச்சினை உருவாகியது. தூக்குக்

கயிற்றுச் சுருக்கு மிகப் பெரியதாக இருந்தது. பெண்ணோ மிக ஒல்லி யான உருவமுடையவளாயிருந்தாள் பல மடங்கு பெரியதாயிருந்தது சுருக்குக் கயிறு. திகைத்து நின்றனர் அதிகாரிகள். தண்டனையை நிறைவேற்ற முடியாமல் திணறினர்கள். மனோவேகத்தைக்காட்டிலும் வேகமாக மந்திரிக்குச் செய்தி எட்டியது. மந்திரி ஓடோடி அரசனுக்கு அறிவித்தான். அரசர் அப்போது உணவருந்திக் கொண்டிருந்ததால் செய்கை மூலமாகவே கூறினர்; பெண்ணின் கழுத்துச் சிறியதாயிருந் தால் சுருக்குக் கயிற்றுக்கேற்ற பருமனுன நபரைக் கண்டுபிடித்துத் தூக்கிலிடுங்கள் என்பதே! அக் கட்டளை தூக்கு மேடைக்கு எட்டியது. ஏ பெண்ணே! இனி சாளரத்தில் நின்று பாடாதே என்று எச்சரிக்கை செய்து நடனப் பெண்ணை விடுவித்தனர். யமனிடத்திலிருந்து விடுதலை யடைந்த அப்பெண் தப்பித்தோம் பிழைத்தோம் என ஓடினுள்.

கயிறுக்கேற்ற கழுத்தைத் தேடினர் காவலர்கள். உண்டு கொழுத் திருந்த மாணுக்கன் அப்போதுதான் வயிறுபுடைக்க தின்றுவிட்டு திண்ணையில் உட்கார்ந்து ஓய்வு எடுக்க வெளியில் வந்தான். காவலாளி களின் கண்கள் அவன் மீது நாட்டங் கொண்டன. ஆகா! கயிற்றுக் கேற்ற கழுத்து இதுவே! என்று ஆரவாரத்துடன் ஓடிவந்து அவனைப் பிடித்து இழுத்துக்கொண்டு சென்றனர். அவன் ஒன்றும் புரியாமல் திணறினுன். வாதாடினுன் கூக்குரலிட்டான். எல்லாம் வீணுயிற்று. உடும்புப் பிடியாகப் பிடித்திழுத்துச் சென்று தூக்கு மேடைமீது நிறுத் தினர் காவலர். ஐயோ! நான் ஒன்றும் தவறு செய்யவில்லையே! என் னிடம் எதை எதிர்பார்க்கின்றீர்? இதென்ன அநியாயம் என்று ஓலமிட்டான். சுருக்குக் கயிற்றுக்குச் சரியாகப் பருத்திருக்கிருய் அல்லவா? அதுவே குற்றம். உயிரை விடு! என்றனர் காவலர்.

கயிறு கழுத்தில் மாட்டப்பட்டது. ஆகா அளவு எடுத்தது போல சரியாக கழுத்தில் அமர்ந்தது கயிறு. அப்போதுதான் குருவை நினைத் தான். குருவின் எச்சரிக்கை கண் முன் நின்றது. ஓவென கதறி அழுதான். நடுங்கினுன் வியர்வை குப்பென்று வியர்த்தது. தன்னை மறந்து அலறினுன். "குருதேவரே! என்னைக் காப்பாற்றுங்கள் உங்கள் வார்த்தையை உதாசினம் செய்த பாவி நான். பாழும் உடலை வளர்த்தேன் உயிரைக் காக்கவில்லையே! குருவை அவமதித்தேன்! சாதனையைக் கைவிட்டேன் உண்டு கொழுத்தே பாழானேன் அதன் பலனை இப்போது அனுபவிக்கப் போகிறேன் என்று புலம்பினுன்.

குழந்தையின் நோய் தீர மருந்து கொடுத்தும் தவறு செய்யாமல் வளர அடித்தும் தாயானவள் திருத்துவது போல, இறைவனும் சீவர் களை வினைகளின் வழி அடுத்துத் திருத்துகிருன். இதனைத் தாயுமானுர் "காரிட்ட ஆணவக் கருவறையில்" எனும் பாடலில், "ஏரிட்ட மொழி தப்பில் நமனைவிட்டு இடருற உருக்கி இடர் தீர்த்து சீரிட்ட உலக அன்னை வடிவான எந்தையே!" என்பர். "சிந்தைத்துயர் என்ெருரு பாவி. நிந்தைக்கிடமாய்ச் சகவாழ்வை நிலையென்றுணர்ந் தே, நிற்கின்றேன்" என்று தாயுமானுர் கூறியவாறு சீடன் விம்மி விம்மி அழுதான். அவனுடைய அருள் வேண்டுதல் வீணுகவில்லை. மேடையருகில் நிறுத்துங்கள்! நிறுத்துங்கள்! என்ற பேரொலி கேட்டு தூக்கிடுபவனும் ஏனையோரும் ஸ்தம்பித்து நின்று ஒலி வரும் திசை நோக்கினுர்கள். ஆம்! சீடனைக் காக்க வந்த குருதேவருடைய குரலே அது. சடைமுடி தாங்கி கம்பீரமான உருவத்துடன் அங்கு வந்து

நின்றார். குருவைப் பார்த்ததும் தெளிந்த அறிவு விளங்கியது சீடனுக்கு. வேண்டாம்! கட்டளையை நிறைவேற்றுங்கள்! பாவியாகிய நான் இம் மகானுடைய முகத்தையும் காணும் அருகதையற்றவன். இப்போதே நான் இறக்க வேண்டியவன் என்று கதறினான்.

குருதேவரோ அக் கயிற்றைத் தாம் கழுத்தில் மாட்டிக்கொள்ள மேடை ஏறினார். நானே தூக்கிலிடப்பட வேண்டியவன் என வாதாடினார். அங்கிருந்தோர்க்கு ஒன்றும் புலப்படவில்லை. அரசர்க்குச் செய்தி அறிவித்தனர். அரசர் விரைந்து வந்தார். குரு மகாப்பிரபு! இதென்ன விபரீதம்? எனக்கொன்றும் விளங்கவில்லையே! என்றான் பதட்டத்துடன். மன்னர் மன்னரே! நான் சோதிட சாத்திரத்தில் வல்லவன். இந்த முகூர்த்தம் மிகவும் மங்களகரமான நேரம். இந்தத் தூக்கு மேடை நிறுவப்பட்ட நேரத்தை கணித்து இந்த முகூர்த்தத்தில் இதே கயிற்றால் தூக்கிலிடப்படுகிறவன் அடுத்த பிறவியில் இப்புவி முழுவதும் ஆளும் மகா சக்கரவர்த்தியாகப் பிறப்பான் என்பதை சரியான கணிதப்படி ஆராய்ந்தறிந்தேன். அந்த ஆசை நிறைவேற ஓடோடி வந்தேன். தாமதிக்காதீர்கள்! உடனே என்னைத் தூக்கிலிடுங்கள் என்று பரபரப்புடன் கூறினார். மூட மன்னனுக்கு அடுத்தப் பிறவியில் மகா சக்கரவர்த்தியாகப் பேராசைப் பிறந்தது. பிச்சைக்கார சந்நியாசியே! உனக்கா இவ்வளவு பேராசை? நானல்லவோ சக்கரவர்த்தியாகப் பிறக்க வேண்டும்? இதோ நானே இந்த நல்ல முகூர்த்தத்தில் தூக்கில் இறக்கிறேன் என்று கூறி யாவரும் எதிர்பாராவண்ணம் கயிற்றைத் தன் கழுத்தில் மாட்டித் தொங்கினான்,

என்னே மூட மன்னனின் முட்டாள்தனமான செயல்? குரு சற்றும் தாமதியாமல் சீடனின் கரத்தைப் பற்றிக்கொண்டு வேகமாக நடந்து இருள் நிறைந்த நகரைநீங்கி ஒளிமயமான இமயமலைச்சாரலை அடைந்தார். சீடன் குருவின் திருவடிகளில் வீழ்ந்து ''ஐயனே உனையன்றி ஒரு தெய்வம் கையினால் தொழவுங் கருதேன்'' என்ற தாயுமானவரின் திருவாக்குப்படி இனி சகலமும் நீரே! என்று அழுதான். குருதேவர் இன்முகங்காட்டி அரவணைத்தார். அஞ்ஞான இருள் நீங்கிய மாணாக்கன் ஒளி நெறியைப் பெற்றான், ''குருவுருவாகி மௌனியாய் மௌனக் கொள்கையை யுணர்த்தினை அதனால் கருவுருவாவது எனக்கில்லை'' என்று தாயுமானவப் பேரருளாளர் பகர்ந்தவாறு மகிழ்வெய்தினான்.

நிந்தைக்கிடமான சகவாழ்வை நிலையென்று நினைந்திருந்த மாணாக்கனை பந்தத் துயரறச் செய்து ''நினைவொன்றும் நினையாமல் நிற்கவைத்தார் அருட்குரு அங்கு அருள்நிலை காட்டி நிட்டைகூடச் செய்தார். தனை மறந்திருந்த அவ்வேளையில் பேரின்பத்தைப் பெறச் செய்தார். அந்த இன்பமெனும் நிலையத்தில் பிறவியற்றிருக்க அருளினார். இதனின்றும் ''நினைவொன்றும் நினையாமல்'' என்ற பாடலில் தாயுமான தயாபரர், ''மனையென்றும் மகவென்றும் சுற்றமென்றும் அசுத்த வாதனையாம் ஆசையொழி மன் ஒரு சொற்கொண்டே'' என்று தெளிவுபடக் கூறியது எத்துணை உண்மையென உணர்கின்றோம்,

எனவே சுவாமிகள் இப் பாடலில், பாவியாகிய நான் சிந்தைத் துயரின் காரணமாக நிந்தனைக்கு இடமாகிய இவ்வுலக வாழ்க்கையே நிலையென்று நம்பி வாழ்கின்றேன்! இங்ஙனம் வாழும் எனக்கு உன் திருவருள் கிட்டுவதுதான் எவ்வாறு? எங்ஙனம் எனக்கு அருள்வீர்! என வேண்டி நிற்கின்றார்.

WINGS OF DIVINE WISDOM

by YOGI SIVALINGAM—U.S.A.

Be brave, then the fears run away,
Be positive, then the negatives run away,
Be faithful, then the un-faith runs away,
Be within to remember about this life,
then the weakness runs away,
Be devoted, then the laziness, runs away,
Be self-surrender, then the Selfish, prouds, trickyings run away,
Be with the Guru and self, then the short-cuttings run away,
Be smart, then the common Knowledge runs away
Be steady, then the stupidity runs away,
Remember the Lord and Guru, then the thoughts of the world and common knowledge run away.
Be clear inwards, then the make-up runs away,
Be cheerful, then the day-sleeping run away,
Be straight forward, then the common humanity runs away,
Read the spiritual books, then the comparings run away,
Be with one goal, then many ideas, run away,
Bear whatever may happen, then the doubts run away,
Give up your wants, then the material life runs away,
Always think and remember to the Lord
of the Self and the Guru, then the little mentality runs away.
Walk straightly without any watchings, then the tired and confusion runs away,
Be moderate, then the untruth and the arguings run away,
Control the senses, then the divineless thoughts run away.
Know to knower, then the common knows run away,
Be with the Self, then the unknown runs away,
Be with ownself, then the watching the watch time runs away through from the mind,
Be with the Supreme and the Guru, then the common boyfriend guru which is the illusion runs away,
Be inner nation, then the cheatings, gossipings, make-upings, and mental-manuscript-reading run away.
Look within then the outer-lookings run away,
Meditate always, then the mental knowledge runs away,
Communicate within, then the showing-to-the-common-man-ideas-and-thoughts run away.
Read your mind, then book-readings and arguing with many doubts run away.

Strict your mind always, that is the great Experiences.
Strict your practical, that is the great Freedom,
Strict your repeating Mantra, that is the great Love of GOD.
Strict yourself, that is the great Human-nature,
Strict your thoughts, that is the great Knowledge,
Strict your Faith, that is the great One-self.
Surrender the Self, then there is nothing troubling,
Surrender all of your life with the Divine-love, then there is nothing bothering you,
Surrender all of your ambitions, expectations, etc., to your Spiritual-Guru, then you so enjoy the other world.
Worry, problems, troubles, unknowledge, dump, laziness—these all come from unfaith, untrust, cheating the Soul (cheated by yourself).
Come closer to closer, think, keep within, watch, steady, practise, patient, strict, devotion, these all give great Self-Realization,
Leave it to the Guru everything, leave it to the Divine nature, leave it to the Spiritual-love, then you are so happy to enjoy with the Divine-nector.

Patience will give progress,
Practical will give Success,
Faith will give Devotion,
Desireless will give Purity,
One-path will give True-life,
One-goal will give Oneness,
Yoga-life will give deathless,
Guru-guidance will give Third-eye opener.

Attain the proper state for the spiritual. and the Heart will show the GURU, Without that, finding the physical way—many pains,
Knowing by yourself is a GURU,
Faithful work if a GURU,
Devotion is a GURU,
Inner calmness is a GURU,
Divine-love is a GURU.
Physical strength is great emotionals, and selfish.

சித்தர் கைகண்ட மருந்து

வைத்தியரத்னம் V. பலராமய்யா, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட நீதிபதி (ஓய்வு)

மலச் சிக்கல், அதனுல் வரும் மயக்கம். சோகை, கால் வீக்கம், இருமல முதலியனவற்றிற்கு

கடுக்காய் சூர்ணம் 50 கிராம், சூரத் நிலாவரை சூர்ணம் 50 கிராம், அதிமதுரத் தூள் 50 கிராம், ஆள் வரை 50 கிராம, ரோஜாப்பூ 50 கிராம், கற்கண்டு 100 கிராம், சீமை அத்திப்பழம் 50 கிராம, வறுத்த பாதாங்கொட்டை 50 கிராம், கொட்டை திராட்சைப் பழம, (கொட்டை நீக்கியது 50 கிராம்.)

எல்லாவற்றையும் இடித்து வைக்கவும். அதில் ஒரு தேக்கரண்டியளவு எடுத்து 2 டம்ளர்கள் தண்ணீரிலிட்டு ½ டம்ளராக வற்ற வைத்து வடிகட்டி காலையில் வெறும் வயிற்றில சாப்பிடவும். முதல் 2 நாட்களுக்கு ஒன்றிரண்டு முறை பேதியாகும். பிறகு பிரதி தினமும் மலசுத்தி நன்ருயாகும். பிரதி தினமும 48 நாட்களுககு சாப்பிடவும்.

பல வியாதிகள குணமாகும். உடலிலுள்ள காந்தல், சொறி, சிரங்கு, மயக்கம முதலியன குணமாகும.

மேல் சுவாசத்திற்கு

சிலருக்குக் கப அடைப்பினுலும், மற்றும் சிலருக்கு வாயுவினுலும் மேல் சுவாசமுண்டாகும்.

மருந்து: அதிமதுரம் 15 கிராம், சுக்கு 10 கிராம், சீனு கற்கண்டு 15 கிராம.

அதிமதுரம் சுக்கு இரண்டையும் தட்டி இரண்டு டம்ளர் தண்ணீரிலிட்டு கற்கண்டும் சேர்த்துக் காய்ச்சி ஒரு டம்ளராக வற்றவைத்து வடிகட்டி படுக்கும் சமயம சாப்பிடவும். ஆஸ்துமா நோயாளிகளும இம்முறைப்படி சாப்பிட குணமளக்கும.

வாதத்தினுல் வரும் வீக்கங்களுக்கு

தேவதாரிப் பட்டை, பரங்கிச் சக்கை இரண்டையும் உத்தலமணி (வேலிப பருத்தி) சாறில இழைத்து சூடு செய்து பற்று போடவும்.

பாதங்களில் நீர் இறங்கி வீக்கமிருந்தால்

வெள்ளாட்டு சாணியை லேசாய் வறுத்து காடி (Vinegar) விட்டறைத்து பற்று போடவும்.

அமுக்கிராக் கிழங்கு தண்ணீர்விட்டறைத்து பற்று போடலாம்.

மதுமேகம் (Diabetes)

அப்பிரக செந்தூரம் குன்றியிடை கீழ்க்கண்ட சூர்ணத்தில் 48 நாட்கள் சாப்பிட மதுமேகம் குணமாகும்.

அமுக்கிராக் கிழங்கு 50 கிராம், ஆவாரை பஞ்சகம் 50 கிராம், சீரகம் 15 கிராம் எல்லாவற்றையும் சூர்ணம் செய்துகொண்டு பசும் பாலில் புட்டவியல் செய்து எடுத்து நிழலில் உலர்த்தவும்.

38-ம் ஆண்டு விழா

14—1—78 மாலை 5 மணிக்கு, சென்னை வண்ணையம்பதி திருவொற்றியூர் நெடுஞ்சாலை, நல்லதம்பி சேதுராமன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. முன்னாள் நீதிபதி உயர்திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் தலைமை வகித்து உரையாற்றனுர்.

சுருக்கம் வருமாறு : யோகாசன ஆலயத்தின் 38-வது ஆண்டு விழாவில் கலந்து கொள்வதில் அளவற்ற மகிழ்ச்சியும் பெருமையும அடைகின்றேன். ஏனைய உயிரினங்களைக் காட்டிலும ஒப்பறற தனி அறிவுபெற்ற நாம் உடலையும் உயிரையும் வளர்க்க யோகான ஆலயம் ஒப்பற்ற சேவை புரிந்து வருவதை நான் நன்கு அறிவேன். மானிடர் களாகிய நாம் மெய்யறிவு பெறுவதையே குறிக்கோளாகக் கொண டிருத்தல் வேண்டும். வேறுபாட்டில் ஒருமைப்பாடு காணுதலே சால வும் சிறந்தது. உறக்கத்தில் மட்டுமே வேறுபாடற்ற நிலையில இருக்கின்ருேம. விழிப்பு நிலையிலும் வேறுபாடற்ற தன்மை பெறுவதற்கே நாம் முயற்சி செய்தல் வேண்டும். வேறுபாடு ஒழிய வேண்டும் என்று கோஷமிடுவதால் மட்டுமே ஒழித்துவிடமுடியாது. ஒவ்வொருவரும் முயற்சிசெய்தே அப் பக்குவநிலை யடையவேண்டும. முற்றுணர்வு பெற்ற நிலையிலேயே 'வேறுபாடு காணுத நிலையை அடைகின்ருேம். இத்தத்துவத்தைத் தாயுமானுர் நமககுத தந்துள்ளார். யோகாசன ஆலயம தாயுமானவர் திருப்பாடல்களைக் கைநூலாகக கொண்டு பணி புரிகின்றது, யோகம் என்ற பெயரில் நாட்டில அலங் கோலங்கள் நடைபெறுவதைக் காண்கின்றேன். யோகாசன ஆலயத தினர் சீரிய முறையில் இப்பயிற்சியினை அளித்து வருகின்றனர். இவர் களின் முயற்சி சேவை ஆகியவை பூரணமாக வெற்றியடைய எங்கும நீக்கமற நிறைந்துள்ள பரிபூரணத்தை இறைஞ்சுகின்றேன,

1977ஆம் ஆண்டறிக்கையை திரு. J. ஹரிஹரகிருஷ்ணன் வாசித்தார்.

